# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2194/4 - 2020 සැප්තැම්බර් මස 21 වැනි සඳුදා - 2020.09.21

*2194/4 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**நாமல் ராஜபக்ஷ** (பா.உ.),
இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
*2020, செத்தெம்பர் 17.*

ஒழுங்கு விதிகள்

*2018.09.22 ஆந் திகதிய இலக்கம் 2089/56 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் ஒழுங்குவிதி 8(2) இனை நீக்கி திருத்தியமைக்கப்பட்ட 2019, ஓகத்து 23 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 2137/86 கொண்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகளில் திருத்தியமைக்கப்பட்ட 8(2) ஒழுங்குவிதியினை நீக்கி, திருத்தியமைக்கப்பட்ட 2020.03.10 ஆந் திகதிய இலக்கம் 2166/9 அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட (திருத்தியமைக்கப்பட்ட) விளையாட்டு ஒழுங்குவிதிகளில் 8 (2) (உ) பிரிவானது கீழ்வரும் விதத்தில் மீண்டும் திருத்தப்படுகின்றது.*

விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடத்து சமர்ப்பிக்கப்படும் சகல மேன்முறையீடுகளும் கவனத்திற் கொள்ளப்பட்டதன் பின்னர் தேசிய விளையாட்டுச் சபையின் அனுமதியினைப் பெற்றுள்ள ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரை உள்ளடக்கிய விளையாட்டு விடயங்கள் மற்றும் விளையாட்டுச் சட்டங்கள் பற்றிய அறிவுடைய எழுவரினைக் (07) கொண்ட குழாமிலிருந்து தெரிவுசெய்து கொள்ளப்பட்ட மூவரினை உள்ளடக்கிய மேன்முறையீட்டு ஆலோசகர் குழுவிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

*10-232*